


கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கோவை மாவட்டம் சூலூர், கோவை வடக்கு, கோவை தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி மற்றும் வால்பாறை தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர்களை ஆதரித்து இன்று மாலை 4.00 மணியளவில், கோவை கொடிசியா மைதானத்தில் நடைபெறும் மாபெரும் பிரச்சார பொதுக்கூட்டத்தில் எழுச்சியுரையாற்றவுள்ளார்கள். அதன் ஏற்பாடுகளை கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர், வி.செந்தில் பாலாஜி பார்வையிட்டார். இதில் கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருமயம் சட்டமன்றத் தொகுதி, அரிமளம் ஒன்றியத்தில் நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல்வீரர்கள் கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், திருமயம் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அமைச்சர் எஸ். ரகுபதி வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றினார். உடன் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பொன்.ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் இராம. சுப்புராம், காங்கிரஸ் தெற்கு மாவட்ட தலைவர் மணிகண்டன், அரிமளம் பேரூர் கழக செயலாளர் நாசர் (எ) செந்தில் குமார் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றியம் அத்திரிவயலில் விராலிமலை சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வெற்றி சின்னமாம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.




காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க, சார்பில் போட்டியிடும், கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிவன் மலை அடிவாரத்தில் இருந்து பிரச்சாரத்தை தொடங்கினார். இதில் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உட்பட கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி

# பெல் தொழிலாளர்களிடம் - அமைச்சர் அன்பில் மகேஷ் வாக்கு சேகரிப்பு!

திருவெறும்பூர், ஏப். 2-

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பெல் (BHEL) தொ.மு.ச. தொழிற்சங்க அலுவலகத்தில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொழிற்சங்க நிர்வாகிகளிடமும், தொழிலாளர்களிடமும் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார்.




**ஆதரவு உறுதி:**

இந்த நிகழ்வின் போது, தொ.மு.ச. பொதுச்செயலாளர் தீபன், மற்றும் நிர்வாகிகள் கணேஷ்குமார், பரமேஷ் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் என பெரும் திரளானோர் கலந்து கொண்டனர். வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை அமோக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம் என அனைவரும் ஒன்றிணைந்து உறுதிமொழி ஏற்றனர்.

**தொகுதியின் அடையாளம்:** கூட்டத்தில் உரையாற்றிய அன்பில் மகேஸ் பொய்யாமொழி, "திருச்சி மாநகருக்கு மலைக்கோட்டை, சமயபுரம், ஸ்ரீரங்கம், செயின்ட் ஜோசப் கல்லூரி தேவாலயம் மற்றும் நத்தர்ஷா பள்ளிவாசல் ஆகியவை எவ்வாறு அடையாளங்களாகத் திகழ்கின்றனவோ, அதேபோல் திருச்சி மாவட்டத்தின் சட்டமன்றத் தொகுதிகளில் திருவெறும்பூர் தொகுதியை ஒரு தனித்துவமான அடையாளமாக மாற்றுவேன்" என உறுதி அளித்தார்.

தன்னிறைவு பெற்ற கிராமங்கள்: ஒரு கிராமம் நகரத்தை மிஞ்சும் வகையில் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெற வேண்டும் என்பதே தனது இலக்கு என்று குறிப்பிட்ட அவர், பின்வரும் வசதிகளை மேம்படுத்த உழைப்பதாகக் கூறினார்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நியாயவிலைக்கடைகள். சீரணி அரங்கம் மற்றும் விளையாட்டு மைதானங்கள். தரமான சாலை மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள். "ஒரு கிராமம் தனக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தன்னிறைவுடன் பெற்றால், மக்கள் வாழ்வாதாரத்திற்காக நகரங்களை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. அத்தகைய தன்னிறைவு பெற்ற தொகுதியாக திருவெறும்பூரை மாற்ற நான் தொடர்ந்து பாடுபடுவேன்," என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது உரையில் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.




தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளரும், திருவையாறு சட்டமன்ற தொகுதியின் கழக வேட்பாளருமான துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ. திருவையாறு வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட விளாங்குடி பகுதியில் திறந்த வெளி ஜீப்பில் பொது மக்களிடம் வாக்குச் சேகரித்தார். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, ஒன்றிய செயலாளர்கள் வை. சிவசங்கரன் கோ.அரசாபகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்



தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் கழக வேட்பாளர் டி.என்.வி.செந்தில்குமார், கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் வாக்கு சேகரித்தார்.

### சேலம் கிழக்கு மாவட்டத்தில் அடங்கிய சட்டமன்றத் தொகுதிகளில்

# தி.மு.க. - கூட்டணி வேட்பாளர்கள் அறிமுகம் - பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிவிப்பு!

சேலம், ஏப். 2 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் கிழக்கு மாவட்டம், கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, வீரபாண்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் அறிமுகம் மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் 3.4.2026 கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்கு காலை 9.00 மணி ரெட்டியார் நல சங்க திருமண மண்டபம், கெங்கவல்லி பேரூர், 083 ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்கு 12.00



மணி, தளபதி. மு.க. ஸ்டாலின் அறிவாலயம், வாழப்பாடி மற்றும் 0404 2026091 வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு காலை 9.30 மணி, கிருஷ்ணா மஹால் நெய்காரப்பட்டி, 082 ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு நண்பகல் 12.00 மணி, துளுவ வேளாளர் திருமண மண்டபம், ஆத்தூரில் எனது தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ராஜேந்திரன் மற்றும் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் செல்வகணபதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள். இக்கூட்டத்திற்கு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், நிர்வாகி கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை – குன்னூர் – கூடலூர் உள்ளிட்ட

# 3 தொகுதிகளில் வெற்றி பெற்றிட தீவிரப் பணியாற்றுவோம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

உதகை, ஏப். 2 -

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ வரவேற்றார். கழக தேர்தல் பணி செயலாளர் அரசு கொறடா கா.ராமசந்திரன் மற்றும் கூடலூர் தொகுதி வேட்பாளர் திராவிட மணி ஆகியோர் முன்னிலை வகித்தார்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜெ.ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், காசிலிங்கம், செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர கழக செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, சிவானந்தராஜா, பிரேம்குமார், பீமன், சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, லியாகத் அலி, வீரபத்திரன், பில்லன், ராஜேந்திரன், உதயதேவன், அமிர்தலிங்கம், மோகன்குமார், செல்வம், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ்குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், சஞ்சீவ்குமார், ரமேஷ்குமார், சுப்ரமணி, சின்னவர், மார்டின், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இமயம் சசிகுமார், கோமதி, விவேகானந்தன், ராஜா, காந்தல் ரவி, வெங்கடேஷ், ராம்குமார், ஆல்வின், வெங்கடேஷ், ரஹமத்துல்லா, ஜெயந்தி, செந்தில்நாதன், அன்வர் அப்துல்லா, சுரேஷ்குமார், ஆலன், ஜெயகுமார், தீனதயாளன், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சுசிலா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, ஹேமாமாலினி, சித்ராதேவி, ராதா, வள்ளி, சத்யவாணி, பங்கஜம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நவுபல், பாபு, நாகராஜ், பத்மநாபன், முரளிதரன், வினோத்குமார், போக்குவரத்து தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், மண்டல பொது செயலாளர் ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் மாவட்ட துணை செயலாளர் லட்சுமி நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

நடைபெற உள்ள சட்டமன்ற பொதுதேர்தலில், நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில்,

உதகை தொகுதியை கூட்டணி கட்சியான இந்திய தேசிய கட்சிக்கு தலைமை கழகம் ஒதுக்கியுள்ள நிலையில், குன்னூர் மற்றும் கூடலூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளர்களை கழக தலைவர் - தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதன்படி, குன்னூர் தொகுதி வேட்பாளராக - நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம். ராஜூ அவர்களையும், கூடலூர் தொகுதி வேட்பாளராக தலைமை கழக செயற்குழு உறுப்பினர் மு.திராவிடமணி அவர்களையும் அறிவித்த கழக தலைவர் - முதல்வர் - திராவிட நாயகர் தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன்,

இவர்களை பரிந்துரைத்து உதவிய கழக துணை பொதுச்செயலாளர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.!

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை - குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உதகை தொகுதியில் கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சியும், குன்னூர் மற்றும் கூடலூர் தொகுதிகளில் திராவிட முன்னேற்ற கழகமும் போட்டியிடுகிறது.

கடந்த அனைத்து தேர்தல்களை காட்டிலும், இந்த தேர்தலில் 3 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள 736 வாக்குச்சாவடிகளிலும் தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகளை பெற்று, வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றிட ஒவ்வொரு கழக நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை அயராது உழைத்து,

2026ல் மீண்டும் தமிழகத்தில் கழக அரசு அமைந்திட ஏதுவாக நீலகிரி மாவட்டத்தில் நூறு சதவீத வெற்றியை கழக தலைவர் முதல்வர் அவர்களிடம் ஒப்படைப்பது என இக்கூட்டம் தீர்மானிக் கிறது.

வெல்லோம் 200!

படைப்போம் வரலாறு!

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.